| Headline | TNB to help to increase public's revenue | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Malar | | |
| Date | 08 Oct 2021 | Language | Tamil |
| Circulation | 22,000 | Readership | 180,000 |
| Section | NEWS | Page No | 5 |
| ArticleSize | 268 cm² | Journalist | N/A |
| PR Value | RM 4,132 | | |
| | | | |



# மக்களின் வருமானத்தை அதிகரிக்க உதவும் தெனாகா நேஷனல்

கோலாலம்பூர், அக். 8–

தெனகா நேஷனல் நிறுவனம் தொழில்துறையின் தேவைகளையும், மக்களுக்கு நியாயமான வருமானத்தை வழங்கும் நிறுவனமாகவும் அதன் பங்கையும் தொடர்ந்து செயல்படுத்தும் என்று தலைவர் டத்தோஸ்ரீ ஹசான் ஆரிஃபின் கூறினார்.

“எங்கள் பங்குதாரர்களுக்கு, குறிப்பாக முதலீட்டு நிறுவனங்களிடையே நாங்கள் மேற்கொள்ளும் சில திட்டங்கள் எங்களின் வாடிக்கையாளர்களின் வருமானத்தை உயர்த்தும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

“2018 மற்றும் 2020 க்கு இடையில், தெனாகா நேஷனல் அதன் பங்குதாரர்களுக்கு ரிம.9.9 பில்லியன் மற்றும் அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட முதலீட்டு நிறுவனங்களுக்கு ரிம.7 பில்லியன் ஈவுத்தொகையை வழங்கியது. இது நிச்சயமாக மக்களுக்கு பயனளிக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம்“ என்று அவர் கூறினார்.

சிறந்த மின்சாரம்




நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் வளர்ச்சி மற்றும் பொருளாதார மீட்புக்கு தெனாகா நேஷனல் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும், எரிசக்தி துறையின் மாற்றத்தின் மூலம் பொருளாதாரத்தை மீண்டும் புதுப்பிப்பதாகவும் அவர் கூறினார்.

“தற்போதைய பொருளாதார சூழ்நிலையில், கோவிட்–19 நோய்த்தொற்றிலிருந்து மலேசியா இன்னும் போராடி வரும் வேளையில், இதுபோன்ற முயற்சிகளைத் தொடர தெனகா நேஷனல் நிதி ரீதியாக உறுதியாக இருக்க வேண்டும். தனது நிதி வளத்தை மேம்படுத்திக் கொள்ள தெனகா நேஷனல் பல திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

“கோவிட் –19க்கு எதிராக போராட அரசாங்கத்திற்கு உதவ முன்வந்த முதல் நிறுவனங்களில்



டிஎன்பி ஒன்று என்று கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்” என்று ஹசான் கூறினார்.

2018 முதல் 2020 வரை, டிஎன்பி வரி மற்றும் ஜகாத் கொடுப்பனவுகள், விற்பனையாளர்களுக்கான ஒப்பந்தங்கள், கார்ப்பரேட் சமூக பொறுப்புணர்வு முயற்சிகள் மற்றும் கோவிட் 19 உதவி உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் பொருளாதாரத்திற்கு ரிம.21 பில்லியனை வழங்கியுள்ளது.

டத்தோஸ்ரீ ஹசான் ஆரிஃபின் அக்டோபர் 1ஆம் தேதி டிஎன்பி தலைவராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

Powered by: isentia